[7th March 1969

ஒருவருக்குத் தலைமை ஆசிரியர் பதவி கொடுக்க முடியாது என்று சொல்வது சரியா? கம்பன், வள்ளுவன், ஒட்டக் கூத்தன் போன்றவர்கள் எல்லாம் இப்போது திரும்பி வந்தால் அவர்களுக்குக் கூட தலைமை ஆசிரியர் பதவி கொடுக்க மாட்டார்கள் போல் தெரிகிறது. ஆகவே அதை மீண்டும் பரிசீலனை செய்து தமிழுக்கு உரிய இடத்தை வெளியிலே அவர்கள் பேசுவதைப் போன்று தருவதற்கு ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : தமிழ் ஆசிரியர்களுக்குத் தலைமையாசிரியர் பதவி கொடுப்பதில் இந்த அரசாங்கத்திற்கு ஆட்சேபணை இல்லை. ஆனால் விதிமுறைகள் குறுக்கே இருக்கின்றன. அதைப்பற்றி ஆராய முயற்சி எடுக்கப்படுகிறது.

திரு. ஜி. கிருஷ்ணமூர்த்தி: எல்.டி., பி.டி. படித்த பிறகு 5 வருஷம் கழித்துத்தான் தலைமையாசிரியர் பதவி கொடுக்கவேண்டுமென்று சொல்லியதை சர்க்கார் ஏற்கனவே ஆலோசித்தது. இப்போது ஐந்து வருஷ நிபந்தனையை எடுக்க ஏதாவது ஆலோசனை இருக்கிறதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : ஏற்கனவே குறிப்பிட்டது போல The request was that five years' of teaching experience after obtaining the B.T. Degree need not be insisted upon. As the question of integration of the services of the staff is under consideration of the Government, the Director considered that there was no need to consider this question at this stage.

Teachers of Madurai Municipality

*151 *Q.*—THIRU G. KRISHNAMOORTHY (on behalf of THIRU M. RAJAH IYER): Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(a) whether the Madurai Municipality has given effect to G.O. Ms. No. 1355, Education, dated 3rd August 1967;

(b) if so, from what date; and

(c) if not, the reasons therefor?

THE HON. THIRU S. J. SADIQ PASHA (on behalf of the Hon. the Minister for Education and Industries): (a) Yes.

(b) 39 posts sanctioned were utilised on 5th February 1968 and 17 posts were utilised on 18th March 1968.

(c) Does not arise.

திரு. ஜி. கிருஷ்ணமூர்த்தி: இந்த சபையில் இப்படிப்பட்ட ஆசிரியர்களுக்கு 3—8—1967-லிருந்து கொடுக்கலாம் என்ற சலுகையை சர்க்கார் ரொம்ப இரக்கத்துடன் ஏற்றுக்கொண்டதால் உதவிபெறும் பள்ளிகளில் அந்தச் சலுகையை வாங்குகிறார்கள். தஞ்சை முனிசிபாலிடியிலும் இன்றைய தினம் செகண்டரி

7th March 1969]

கிரேடு போஸ்ட்டுக்கு எப்போது போடுகிறார்களோ அந்தத் தேதியிலிருந்து தான் கொடுக்கிறார்கள். ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்பட்டதே தவிர போஸ்ட்டுக்கு இல்லை. 12 வருஷமாகக் கிடைக்க வில்லை என்று சொல்லி இந்த ஆர்டர் வந்த பிறகு அனுதாபத்துடன் கொடுக்கப்படவேண்டும். 3—8—1967 விருந்து aided பள்ளி களில் கொடுப்பதைப்போல முனிசிபல் பள்ளிகளிலும் கொடுக்க சர்க்கார் வழிவகை செய்வார்களா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : அதைப்பற்றிய தகவல் இப்போதில்லை.

Government (Board) High Schools

*152. *Q.*—THIRU G. KRISHNAMOORTHY (on behalf of THIRU M. RAJAH IYER): Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) the number of posts of (i) B.T. Assistants, (ii) Secondary Grade Assistants and (iii) Tamil Pandits that were abolished in the Government (Board) High Schools in the Madurai district during 1968–69; and

(*b*) the reasons therefor?

THE HON. THIRU S. J. SADIQ PASHA (on behalf of the Hon. the Minister for Education and Industries):

(*a*) B.T. Assistant	**5**
Secondary Grade Assistants	**1**
Tamil Pandits—	
Grade I	**2**
Grade II	**8**

(*b*) Due to fall in strength, certain sections were abolished.

Loans granted to Goldsmiths

*153 *Q.*—THIRU N. R. THIAGARAJAN: Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) whether a resolution was passed at the Tamil Nadu Goldsmiths Conference held at Tiruchirappalli in August 1968 for waiving the loan amount;

(*b*) if so, whether this resolution was received by the Tamil Nadu Government; and

(*c*) the steps taken thereon?

பொற்கொல்லர்களுக்கு அளித்த கடன் தொகை

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1968 ஆகஸ்டில் திருச்சியில் நடந்த தமிழ்நாடு பொற் கொல்லர் மாநாட்டில் கடன் தொகையை தள்ளுபடி செய்யக் கோரி தீர்மானம் நிறைவேற்றினார்களா?